விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, வைகாசி ௨6 (19-5-68) ஸபர் 20— புத்தகம் 22 இதழ் 35

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்
மில்க்வைற்
புதிய மேலுறைகளுடன் இலங்கை முழுவதும் விற்பனையாகிறது

# இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்வதில் புதிய சிக்கல்கள்!

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பங்கள் பெறுவதிலும் அவற்றை நிரப்பி அனுப்புவதிலும், மலைநாட்டுத் தமிழர்களுக்குப் புதிய சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுச் செய்வதில் மலைநாட்டுத் தமிழ் மக்களிடையே ஆர்வம் கரைபுரண்டோடுகின்ற போதிலும், அந்த ஆர்வத்துக்கு அணைபோடுவதில் சில சக்திகள் முயன்று வருவதாகவும் அறியப்படுகிறது.

இலங்கைப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் மலையகத் தமிழர்களுக்குச் சுலபமாகக் கிடைக்கக் கூடிய விதத்தில் தோட்டக் காரியாலயங்களிலும், மாவட்டகாரியாதிகாரி அலுவலகம், கச்சேரி போன்றவற்றிலும் வைத்து விநியோகம் செய்யப்படும் என்று ஒப்பந்த அமுலுக்குப் பொறுப்பான ஆணையாளர் கூறியிருந்த போதிலும், அது சரியாக அமுல் நடத்தப்படவில்லையென்று புகார் கூறப்படுகிறது.

பல இடங்களில் விண்ணப்பப் படிவங்களை பெறமுடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கின்ற இடங்களிலும் அவற்றைத் தொகையாக அரசாங்கம் அனுப்பி வைக்காததால், போதிய அளவு மக்களுக்குக்

(5-ம் பக்கம் பார்க்க)

## பதவிகளை துறந்து மீண்டும் தேர்தலில்போட்டியிடதயாரா?


### தமிழ்காங்கிரஸ் எம்.பீக்களுக்கு தமிழரசு எம்.பி. பதில் சவால்!

"மாவட்ட சபை நிறுவப்படுவதை எதிர்க்கும் தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் மூவரும் தங்கள் பதவிகளை ராஜிஞமா செய்து விட்டு மாவட்ட சபை பிரச்சினையை முன் வைத்து மீண்டும் தேர்தலில் போட்டியிடத் தயாரா? வடபகுதியில் மேடைக்கு மேடை நின்று பெட்டைக் கோழிபோல கொக்கரிப்பதை நிறுத்தி விட்டு இந்தச் சவாலை ஏற்க அவர்கள் தயாரா?

இவ்வாறு தமிழரசு எம். பியொருவர் சுதந்திரன் மூலம், தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் மூவருக்குச் சவால் விடுத்துள்ளார். குறித்த எம். பி. மேலும் கூறியதாவது:—

'சவால் விடுவது மட்டும் தான் திரு. பொ.வுக்குத் தெரியும். கடந்தகால அரசியல் வரலாறு தெரிந்தவர்களுக்கு திரு. பொன்னம்பலம் விடுத்த சவால்கள் எத்தனையென்பதும், அச்சவால்களில் அவர் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லையென்பதும் தெரியும். அவரது அரசியல் வாழ்வே சவால் விடுவதில் கழிந்து விட்டது. அவரது சவாலை ஏற்று நாம் பொது

(5 ம் பக்கம் பார்க்க)




பொன்னம்பலத்தின் "சவால்"

## கட்டுப்பாட்டு சட்டம் தற்காலிக வாபஸ்

வடபகுதியில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட பாவனைப் பொருட் கட்டுப்பாட்டுச் சட்டம் தற்காலிகமாகவாபஸ் பெறப்பட்டுள்ளது. இத்தகவலை தமிழரசுத்தந்தை திரு: சா. ஜே. வே. செல்வநாயகத்துக்கு பிரதமர் அறிவித்துள்ளார்.

விரைவில் கொண்டு வரப்படவிருக்கும் புதிய விதிகள் வடபகுதியில் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு கரையோரப் பகுதிகளிலும் அமுல் நடத்தப்படுமென்று தெரிகிறது. இதனால், வடபகுதி தமிழர்களை அவமானபடுத்தும் நோக்குடன் இச்சட்டம் கொண்டு வரப்படவில்லையென்பதை தெளிவாக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது.

புதிய விதிகளின்படி பாவனைப் பொருட்களின் அளவு அதிகரிக்கப்படுமென்றும், எதுவித கேள்வி முறையுமின்றி பொலீஸ், இராணுவம் வீடுகளில் நுழைந்து சோதனையிடுவதைக்கட்டுப்படுத்துமென்றும் தெரிகிறது.

## உணவுற்பத்தி பிரசாரத்திலும் தமிழ்புறக்கணிப்பு

உணவுற்பத்தியைபெருக்கும் நாட்டத்துடன் தபால் உறைகளில் 'அதிக உணவு பயிரிடுக' என்றோர் விளம்பர வாசகத்தை அரசாங்கம் பொறித்து வருகிறது. ஆனால் அதிலும் கூட தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டு தமிழ் மக்கள் வேதனைப்படுகிறார்கள்.

'அதிக உணவு பயிரிடுக' முத்திரை சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே காணப்படுகிறது. ஆங்கிலத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை தமிழுக்கு அளிக்க அரசு முன் வராததேன் என்று கேட்கப்படுகிறது.

பிரதமரது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து உணவுற்பத்தியில் முழு மூச்சுடன் உழைத்துவரும் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் பரிசு இதுதானா என்று தமிழ் மக்கள் மனம் வெதும்புகின்றனர்.

இது சம்பந்தமாக இ. தொ. க. துணைச்செயலாளர் திரு. கோவிந்தராசன் தபால் தலைவருக்கு கண்டனக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

## குடியேற்றத் திட்டங்களிலும் கொம்யூனிஸ்டுகள் ஊடுருவல்!

படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்களுக்குள்ளும் சீனசார்பு கொம்யூனிஸ்டுகள் நுழைய முயன்று வருவதாகத் தெரிகிறது. விசுவமடுக்குள குடியேற்றத் திட்டத்திலும் புதுவையாறு குடியேற்றத் திட்டத்திலும் கொம்யூனிஸ்டுகள் ஊடுருவி அங்கே பெருங் குழப்பத்தை உண்டாக்கத் திட்டமிட்டிருப்பதாக அரசாங்கத்துக்கு ஆதாரபூர்வமாகச் செய்தி கிடைத்துள்ளது.

விசுவமடுக்குளத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாகப் பல ஏக்கர் காணிகளிலுள்ள மிளகாய் கன்றுகள் சேதமடைந்தன.

இது சம்பந்தமாக அங்குள்ள இளம் விவசாயிகள் உடனே கிளிநொச்சி பா.உ. விடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் யாழ். அரசாங்க அதிபருக்கும் வவுனியா மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளருக்கும் அவசரத் தந்தி அனுப்பி வைத்தும் தொலைபேசி மூலமும் அவ்வுத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தார். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் விசுவமடுக் குளத்தைச் சேர்ந்த சீன சார்பு கம்யூனிஸ்ட் அனுதாபி என்று கூறப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சொ. சங்கரலிங்கம்,
தெல்லிப்பளை.

கே: தமிழரசு. எம். பி.க்களின் உதவியால் யாழ்ப்பாணம் வெங்காயத்துக்கு ரூபா 4/- கூடுதலாகக் கொடுப்பது என்று சுதந்திரனில் செய்தி வெளிவந்ததே! இது நடக்கிற அலுவல் என்று நம்பலாமா?

ப: யாழ் வெங்காய உற்பத்தியாளர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு வெங்காயக்கொள்வனவு விலையை 4 ரூபா உயர்த்த வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றனர் தமிழரசு எம். பீகள். ஏன் அந்த முயற்சி பலிதமாகக் கூடாது?

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி

கே: யாழ்ப்பாணத்தில் சில பஸ்களில் முன் பக்கம் மாத்திரம் போட் மாட்டியிருக்கிறார்கள். பின் பக்கத்தில் போட்டைக் காணவில்லை. பின் பக்கம் போட் மாட்டாததன் காரணம் என்ன?

ப: அது தேவலையே, கொழும்பில் சில பஸ்களில் முன் பக்கமும்போட்மாட்டாமல் பஸ்களை ஓட்டுகிறார்களே!

ஃ

ஜோ. இராஜன்,
திருகோணமலை

கே: பிரபல மாணவர்களெல்லாம் தலையில் காயம் பட்டு இறக்கிறார்களே ஏன்?

ப: தலைக்குள் இருப்பதைக் கொண்டுதானே அவர்கள் பிரபலமடைகிறார்கள். அதனால் தானோ என்னவோ?

கே: அன்புக்கு அடி பணியாத மனிதர்களும் இவ்வுலகில் உண்டா?

ப: உண்டு. காந்தியும் கென்னடியும், மார்ட்டின் லூதரும் மனிதர்களிடத்தில் அளவற்ற அன்பு கொண்டவர்கள். அந்த அன்புக்கு கட்டுப்படாமல் அவர்களை சுட்டுக்கொன்றதும் மனிதர்கள் தானே!

ஃ

சே. ஜீவரத்தினம்,
யாழ்ப்பாணம்

கே: ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினரை தமிழ் அரசு கட்சி விலத்தியதின் காரணம் என்ன?

ப: கட்டுப்பாடுள்ளது தான் கட்சி. ஒரு பிரச்சினை பற்றி கட்சிக்குள் எந்த மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டாலும், அப் பிரச்சினையில் கட்சி விவாதித்து ஒரு முடிவுக்கு வந்த பின்னர், அதை ஏற்றுக் கொண்டு, ஒரே குரலில் வெளியில் பேசுவதே பண்பு-ஊர்காவற்றுறை எம். பி. ஒரு முறையல்ல-இரு முறையல்ல-மூன்று முறை கட்டுப்பாட்டை மீறி நடந்துவிட்டார். அதன் பின்பும் அவரை கட்சியில் வைத்திருந்தால், தமிழரசுக் கட்சி ஓர் கேலிப் பொருளாகி விடும்!

ஃ

த. பு. ராசா,
கைதடி

கே: நீங்கள் ஒவ்வொரு கேள்விகளுக்கும் சுடச் சுட பதில் அளிக்கிறீர்களே அது ஏன்?

ப: நீங்கள் சுடச் சுட கேள்வி கேட்பதினால்!

கே: மாவட்ட சபை வருமா? வர மாட்டாதா?

ப: நிச்சயம் வரும்!

ஃ

சி. ஜானகி,
உடுவில் கிழக்கு

கே: சில பெண்களின் ஆபாச உடையல்லவா இளம் வாலிபர்களை தீயவழியில் செல்வதற்கு காரணம்?

ப: உண்மைதான்!

கே: நான் ஜி. சி. ஈ. சோதனை எடுக்கப் போகின்றேன். சித்தியடைவதற்கு எவ் வழி எடுத்துப் படித்தால் சித்தியடையலாம் எனக் கூறுங்கள்?

ப: காதல் நினைவுகளை கொஞ்ச நாட்களுக்கு ஒத்திப் போட்டுவிட்டு படிப்பில் கவனம் செலுத்துங்கள்! சித்தியடைந்துவிடலாம்.

ஃ

தமிழன்,
வெள்ளவத்தை

கே: ஊர்காவற்றுறை பா. உ. நவரத்தினம் தமிழரசுக் கட்சியில் திரும்பவும் சேருவாரா?

ப: அவர் சேர்ந்தாலும், தமிழரசுக் கட்சி சேர்க்குமா?

ஃ

சி. செல்வநாதன்,
உடப்பு

கே: நான் உம்மைப் பார்ப்பதற்கு உமது வீட்டிற்கு வந்தால் நீர் எனக்கு என்ன தருவீர்?

ப: நீர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் தருவேன். வரும்போது வயிற்று வலி மாத்திரையை மறந்துவிடாதீர்!

ஃ

அ. அன்ரனிக்கிறிஸ்ரி,
யாழ்ப்பாணம்

கே: பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி எக் கட்சியைச் சேர்ந்தவர் குயுக்தியாரே?

ப: திருமதி இந்திரா எல்லாக் கட்சிகளையும் அணைத்து ஆட்சி நடத்துவதால் உங்களுக்கு இந்த சந்தேகம் ஏற்பட்டு விட்டது போல இருக்கிறது. அவர் தனது அப்பா நேரு கட்சியைச் சேர்ந்தவர்.

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு

கே: காதல் சம்பந்தப்பட்ட பிதற்றல் கேள்விகளுக்கு எல்லாம் பெரும் அக்கறையோடு பதில் கூறும் தாங்கள் அவையல்லாத மறு கேள்விகளுக்கு இவ்வளவு கேலியாகவும் அலட்சியமாகவும் பதில் கூறக் காரணம் என்ன?

ப: இது உங்கள் மனக் கோளாறு. எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே மாதிரியே என்பதில் இருக்கிறது. ஆனால் காதல் கேள்வி பதிலைத்தான் நீங்கள் ரசிக்கிறீர்கள் என்பது உங்கள் கேள்வியிலிருந்து தெரிகிறது. அப்படித்தானே!

ஃ

க. மலர்ராஜன்,
திருகோணமலை.

கே: நான் ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து செய்திகள் கிடைக்காவிட்டால் பொய்ச் செய்திகளைப் போட்டு, அல்லது ஒன்றை இன்னொன்றாக்கி வெளியிட இருக்கிறேன். நீர் என்னோடு கூட்டுச் சேர்வீரா?

ப: என்னால் அந்த வேலை முடியாது. பொய்ச் செய்திகளை வெளியிட்டு வரும் தினசரி ஒன்றின் சேர்குலேஷன் அதலபாதாளத்துக்குபோய் விட்டதாம். அந்த தினசரியின் ஆசிரியருக்கு விரைவில் கல்தா கொடுக்கப்படலாமாம். விரும்பினால் அவரை உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்!

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி

கே: அடையாள அட்டை மசோதாவை நவரத்தினம் ஏன் எதிர்க்கிறார்.

ப: மனப் பிரமையால்!

கே: தேசிய அரசாங்கத்தில் இருந்து காங்கிரஸ் வெளியேறினால்...?

ப: அரசாங்கம் அப்படியொன்றும் கவிழ்ந்து விடாது.

கே: இலங்கைத் தி. மு. க. பற்றித் தங்கள் கருத்து யாது?

ப: அப்படியொரு தி. மு. க. இயங்குவதாக தெரியவில்லை. பத்திரிகைகளிலும், லெட்டர் பாட்களிலும் தான் இருக்கிறது.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

# ஒளி எங்கே?

**—வே. குமாரசாமி—**

பண்ணி சைக்கொரு கண்ணி கெண்டையள்
பாவினாள் இள நெஞ்சிலே
வண்ணமோ! அவள் விண்ணி லேதவழ்
வெண்ணி லாவதன் தோழியோ
ஒண்ணுமே புரியா தஓர் கதி
என்னை உந்தி எழுந்ததும்
எண்ண ஓடையில் துள்ளி ஓடின
எண்ணி லாதபல் லாசைமீன்.

பாவி யாரிதைப் பாத்த னன்பணப்
பண்ட மென்றதோர் பொய்இரை
தூவி ஏனவன் துயரெனும் வலை
தூக்கி வீசித் தொலைக்கிறான்
ஆவி சோருது ஐயகோ என—
—தாசை மீனினம் வாழுமோ?
பாவை யாளவள் எங்கெடாஎன்றன்
பார்வை யின்ஒளி எங்கெடா?

நிமிடக் கதை:

## சுவீப் டிக்கட்

மாலை சுமார் எழு மணி இருக்கும். யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் மானிப்பாய் பஸ்சுக்காக நின்று கொண்டிருந்தேன்.

'போனால் ஐம்பது சதம் வந்தால் ஒரு இலட்சம்' என்றவாறு சுவிப்டிக்கற் விற்கும் ஒரு சிறுவன் எனக்கு முன் வந்து நின்றான். நான் 'தேவையில்லை' என்ற பாணியில் தலையசைத்தும் அவன் நகரவில்லை.

ஐம்பது சதத்தை இழக்க மனமில்லா விட்டாலும், ஊரைஏமாற்றாமல் பிறரை வஞ்சியாமல் ஏதோ தனக்குத் தெரிந்த ஒரு தொழிலைச் செய்துசிறு தொகையையாவது சம்பாதிக்கும் அந்தச் சிறுவனை என்மனம் பாராட்டவே செய்தது.

சில நிமிடங்கள் கழிந்தன: அப்பொழுதும் சிறுவன் அங்கேயே நின்றான். எனக்கு டிக்கற் விற்காமல் அவன் போக மாட்டான் போலிருக்கிறது.

'இருண்டு போச்சுதண்ணை வீட்டை போக வேணும் இன்னும் ஆக இரண்டு டிக்கற்தான் இருக்கு. ஒண்டை எடுங்கோ.'

சிறுவனின் இந்தப் பரிதாபகரமான வார்த்தையைக் கேட்டதும் எனக்கு இரக்கமே வந்துவிட்டது. ஓடி ஆடி விளையாட வேண்டிய இந்த வயதில் உழைத்துத்தான் ஆகவேண்டும் என்ற பாரிய பொறுப்பு அவன் மீது சுமத்தப் பட்டுள்ளதை அறிந்து வருந்தினேன்.

ஒரு டிக்கற் வாங்கி அவனை ஊக்கப் படுத்தினேன் சிறுவன் நன்றி சொல்லி விட்டு குதூ கலத்துடன் ஓடி விட்டான். தனது வீட்டுக்குதான் அவன் ஓடியிருக்க வேண்டும்.

'ஓர் ஆறுதல் பரிசாவது கிடையாதா? என்ற ஏக்கத்துடன் அன்றைய பத்திரிகையில் சுவிப் முடிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன ஆச்சரியம்? ஆறுதல் பரிசென்ன? முதலாம் பரிசே எனக்குத்தான்!

எப்படிப் பரிசைப் பெறுவது? காராகவே வாங்குவதா? அல்லது பணமாகப் பெறுவதா? அதைக் கொண்டு என்ன செய்வது?


இன்னும் இரண்டொரு தினங்களில் நான் பரிசைப் பெறபோகிறேன். சுவிப் காரின் சாவியை நான் பெற்றுக் கொள்ளும் படங்கள் பத்திரிகைகளில் வரப்போகின்றன. கூடவே என்னைப் பற்றி குறிப்புகளும் என் எதிர்காலத் திட்டங்களும் வரப்போகின்றன.

இன்ப நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த என்னை 'என்ன உங்களுக்குப் பைத்தியமா பிடித்து விட்டது? பழைய சுவிப் டிக்கற்றை வைத்து புதிய சுவிப் முடிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறீர்களே? சரி அப்படியாவது அதிட்டம் அடித்திருக்கிறதா?' என்று எனக்குப் பின்னால் நின்று கேலி செய்தாள் என் மனைவி.

மகத்தான தோல்வியைத் தழுவிக் கொண்டவன் போல் டிக்கற்றில் எத்தனையாவது சுவிப் என்பதையும் திகதிகளையும் கவனித்தேன். ஆம் அது ஐந்து மாதங்களுக்கு முன் இழுக்கப்பட்ட ஒரு பழைய டிக்கற்!

பொருட்கள் சுற்றக் கூட உதவாத ஒரு கடதாசிக்கு போயும் போயும் நான் ஐம்பது சதம் கொடுத்துவிட்டேனே!

**—பொ. சண்முகநாதன்**




பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது

**கமலாபீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11

தந்தி: தாமரை

தொலைபேசி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# வருமுன் காக்க!

தமிழ் இன விரோதிகள் மீண்டும் வாளேந்தி விட்டனர். கடந்த சில நாட்களாக நாட்டில் சிங்கள இனவெறி அதிதீவிரமாக மீண்டும் தலைதூக்கியுள்ளது. தினசரி தமிழ்த் துவேஷப் பிரசாரம் சிங்களப் பகுதிகளில் மிக வேகமாக நடத்தப்பட்டு வருகிறது. ஆங்காங்கே சிங்கள பெரமுனைக்களும், முன்னணிகளும் புதிது புதிதாக முளைத்து சிங்கள மக்களிடையே தமிழ் வெறுப்பை வளர்த்து வருகின்றன. பௌத்த பிக்குகள் சிலரும் வகுப்பு துவேஷத்தை கக்கி வருகின்றனர். இதனால் மீண்டும் ஓர் '1958' உருவாகுமோ என்று தென்னிலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இன்று பீதியடைந்துள்ளனர்.

இத்துவேஷப் பிரசாரத்தை முடுக்கிவிட்டு வருபவர்கள் கூட்டாட்சிக்கட்சியினரே. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கு ஊறு விளைவிக்க மாட்டோம் என்று சில நாட்களுக்கு முன்னர் நீலிக்கண்ணீர் வடித்தவர்கள்தாம் இந்தக் கூட்டாட்சிக்கட்சியினர். வடித்த நீலிக்கண்ணீர் வற்ற முன்னர் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டிவிடும் விஷமப்பிரசாரங்களையும் நடத்தி வருகின்றனர்.

தமிழ் பேசும் மக்களுக்கெதிராக துவேஷமூட்டும் பிரசாரங்களுக்கு இன்று ஆதாரமாக கூட்டாட்சிக் கட்சியினர் கொண்டிருப்பது உத்தேச மாவட்ட சபை மசோதாவையே.

மாவட்ட சபைகளை நிறுவுவோம் என்று தாங்கள் ஆட்சியிலிருந்தபோது சிம்மாசனப் பிரசங்கங்கள் மூலம் பலமுறை நாட்டு மக்களுக்கு அறிவித்தவர்கள் இன்று அதே மாவட்ட சபைகளை எதிர்த்துப் பிரசாரம் நடத்துவதைப் பார்க்கும்போது இந்த நாட்டின் அரசியல் எத்துணை தூரம் கேவல நிலையை அடைந்து விட்டது என்று பரிதாபம் ஏற்படுகிறது.

சரி, மாவட்ட சபை அமைப்புக்கள் ஏற்படுவதை அன்று ஆதரித்தோம் இன்று எதிர்க்கிறோம் என்று கூட்டாட்சி கட்சியினர் கூறுவார்களானால் — மாவட்ட சபைகளை எதிர்த்து கொள்கை அடிப்படையில் பிரசாரம் செய்யட்டும். அதை விடுத்து தமிழ் துவேஷத்தை கிளப்புவானேன்?

மாவட்ட சபைகள் இந்நாட்டில் நடைமுறை சாத்திய மற்றது என்று கூட்டாட்சிக்கட்சியினரும், ஏனைய மாவட்ட சபை எதிர்ப்பாளர்களும் கருதுவார்களானால்-அரசியல் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் அதற்கு எதிரான காரணங்களை கூற வேண்டும்' அதுதான் அறிவுடமை: அதுதான் அரசியல் பண்பு.

ஆனால் மாவட்ட சபை எதிர்ப்பு என்னும் சாட்டில் சிங்கள மக்களிடையே பூச்சாண்டி காட்டி தமிழ் விரோத உணர்வை யூட்டி அதன் மூலம் இரு இனங்களையும் மோதவிட்டு அரசியல் லாபம் பெறுவதே கூட்டாட்சி கட்சியினரின் நோக்கம்.

இன, மத கலவரங்களால் அதலபாதாளத்துக்குப் போய்விட்ட இந்நாட்டுப் பொருளாதாரத்தை எல்லா இன மக்களையும் அணைத்து ஆட்சி செய்வதன் மூலம் தேசிய அரசாங்கம் சீர் செய்து செப்பனிட்டு வருகிறது. மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படுமாயிருந்தால், அடுத்த 20 வருடங்களுக்கு இந்நாடு ஏற்றமுற முடியாது.

ஆகவே நாட்டில் ஆங்காங்கே நடைபெற்று வரும் தமிழ்த்துவேஷப் பிரசாரங்களையும் நடவடிக்கைகளையும் முளையிலேயே கிள்ளியெறிவதற்கு தேசிய அரசாங்கம் உடனடியாக கடுமையான நடவடிக்கையெடுத்தாக வேண்டும். இதில் அரசாங்கம் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் தமிழ் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக விஷம் தூவப்பட்டு வருகிறது என்பதை மறந்து விடலாகாது. வந்த பின் தடுப்பு நடவடிக்கையெடுப்பதைவிட வருமுன் காப்பதே அரசின் கடமையென்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# இனமாற்றமா மதமாற்றமா?

வட இலங்கையிலிருந்து சுமார் 100 சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் காலிக்குச் சென்று அங்கு பௌத்தத்தைத் தழுவிச் சிங்களம் கற்று வருவதாகவும் இதற்கான ஏற்பாடுகளைச் சில பௌத்த பிக்குகள் கவனித்து வருவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இச்செய்தி தமிழ் மக்கள் அனைவரையும்-குறிப்பாக வடபகுதியில் வாழும் தமிழ் மக்களை வெட்கித் தலைகுனியும்படி செய்திருக்கும். ஆனால் இத்திட்டத்துள் விரிக்கப்பட்டிருக்கும் வலையோ பயங்கரமானது.

ஒருவர் தாம் விரும்பியபடி மதம் மாறுவது பற்றி நமக்கு ஆட்சேபமில்லை. ஆனால் இப்பொழுது நடைபெற்றுள்ளது வெறும் மதமாற்றமல்ல: மதமாற்றம் என்ற போர்வையில் இனமாற்றமே. குறித்த 100 பிள்ளைகளுக்கும் விரைவில் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏற்கெனவே கேடுகெட்ட சாதிபேதத்தால் பிளவுபட்டு நிற்கும் தமிழ் மக்களை மேலும் பிளவுபடுத்தவும், தமிழினத்தைச் சிறுகச் சிறுக அழித்து விடுவதுமே இத்திட்டத்தின் உள்ளாந்தர நோக்கமாகும்.

ஆனால் இந்நிலையைத் தோற்றுவித்தது யார்? பௌத்த பிக்குகள் தமிழ்ப் பகுதிகளில் நுழையவும், சிறுபான்மைத் தமிழ் மக்களில் சிலருக்கு ஆசைகாட்டித் தம் வலையில் இழுக்கவும் சந்தர்ப்பமளித்தது யார்? வடபகுதியில் வாழும் உயர் சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோரே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

சிறுபான்மைத் தமிழர்களுக்குச் சமத்துவம் அளிக்க மறுத்ததும், ஆலயங்களிலும் பொது இடங்களிலும் அவர்களைப் பிரித்து ஒதுக்கித் தீண்டாதவர்களாக்கி வைத்ததுமே இதற்கான அடிப்படைக் காரணம். தமிழினத்தின் ஒற்றுமைக் கட்டடத்துள் ஏற்பட்ட இந்தப் பிளவூடாகத் தான் தென்னிலங்கைப் பௌத்த பிக்குகள் நுழைய முடிந்தது.

நன்றும் தீதும் பிறர்தர வாரா என்பது சங்கப் புலவன் வாக்கு. தமிழினத்தை வாழ வைப்பதும், மாள வைப்பதும் தமிழ் மக்கள் கைகளில் தான் உள்ளது. ஆகவே இன்னும் தீண்டாமை பாராட்டும் உயர் சாதித் தமிழ் மக்கள் என்று கூறப்படுவோர் 100 தமிழ்ப் பிள்ளைகளைக் காவு கொடுத்த பின்னர் இனியாவது சாதித் திமிர் ஒழித்துச் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் சமத்துவம் அளிக்க முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அதே நேரத்தில் பௌத்த பிக்குகளின் பிரசாரத்தில் மயங்கித் தமிழ் இனத்தைப் பிளவுபடுத்தும் எவ்வித நடவடிக்கையிலும் இறங்க வேண்டாமென்று சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். மதமாற்றத்தினாலோ இனமாற்றத்தினாலோ தீண்டாமைப்பிரச்சினையை ஒரு போதும் தீர்த்துவிட முடியாது என்பதே நமது தீர்க்கமான கருத்தாகும்.

தீண்டாமை ஒழிப்பில் தீவிரம் காட்டி முன்னின்று உழைத்து வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தினரையும் இவ்வேளையில் பாராட்டுகிறோம்.

# "மாவட்ட சபை சமஷ்டி ஆட்சிக்கு அத்திவாரமாம்"

## சொல்வது தமிழரசாரல்ல சுதந்திரக் கட்சியின் ஏடு!

"மாவட்ட சபைகளுக்கு கிராம சபைகளின் அதிகாரங்கள் கூட இருக்காது என்று பிரதமர் கூறுகிறார். ஆனால் உத்தேச மசோதாவின் விதிகளைப் பார்க்கும் போது பிரதமர் கூறுவது பொய் என்பது தெளிவாகிறது. உண்மையில் தமிழரசுக்கட்சியினரின் இறுதி இலட்சியமான சமஷ்டி ஆட்சிக்கு அடி அத்திவாரம் இடுவதாகவே மசோதா இருக்கிறது. சிறிது ஆழ்ந்து சிந்தித்தால், இலங்கையை தமிழ் இராச்சியமாகவும் சிங்கள இராச்சியமாகவும் பிளவுபடுத்தும் திட்டத்தின் முதற்படியாக மா. சபை மசோதா இருக்கிறது"

இவ்வாறு கூட்டாட்சிக்கட்சியினரின் ஆங்கில வார இதழான 'நேஷன்' அதன் மே முதலாந் திகதிய இதழில் எழுதியுள்ளது.

இக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

கடந்த 3 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சியின் தந்திரம் நிறைந்த வேலைத் திட்டத்தைப் பார்த்து வருகிறோம்.

முதலாவதாக, 1956-ம் ஆண்டுக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்களுக்கு சிங்களம் படிப்பதிலிருந்து விதிவிலக்கு எடுத்துக் கொடுத்தது. இதன் மூலம் ஆட்சி நிர்வாகம் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாறுவதை அடுத்த கால் நூற்றாண்டுக்கு பின் தள்ளிவிட்டது. இது ஓர் தேசத்துரோக நடவடிக்கையாகும்.

### தமிழ் மொழி விதிகள்

அடுத்ததாக தமிழ்மொழி சட்டத்தின் கீழ் விதிகளை நிறைவேற்றி வைத்தது. உத்தியோக மொழியான சிங்கள மொழியை அமுல் நடத்த விதிகள் தயாரிக்கப்படுமுன்பு தமிழ் மொழி விதிகள் தயாரிக்கப்பட்டதையும் அவை அமுல் நடத்தப்படுவதையும் நாம் கண்டிக்கிறோம். ஆங்கிலத்தில் அரசாங்க வேலைகளைக் கவனிப்பதற்கு பிரதமரும், சமஷ்டிக் கட்சியினரும் சதி செய்கிறார்கள். இது பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு இழைக்கும் துரோகம்.

மூன்றாவதாக மாவட்ட சபை மசோதா, இதனால் நாடு பிளவுபடப்போகிறது. இதுவரை மத்திய அரசாங்கத்தால் கவனிக்கப்பட்டு வந்த அதிகாரங்கள், பொறுப்புகள், வேலைகள் என்பன பரந்த அளவில் மாவட்ட சபைகளுக்கு அளிக்கப்படவிருக்கின்றன.

ஒரு மாவட்ட சபை தனது பெரும்பான்மை வாக்குகளால், எந்த மொழியில் நிர்வாகம் நடத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க முடியும். உத்தியோக மொழியைப் பற்றி (சிங்களம் மட்டும்) அது கவலைப்படத் தேவையில்லை.

### பரந்த அதிகாரம்

மாவட்ட சபைகள் தனது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துள் இருக்கும் அசைகின்ற, அசையாத சொத்துக்களைப் பொறுப்பேற்கலாம். இவைகள் எல்லாம் இதுவரை மத்திய ஆட்சிக்குட்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மாவட்ட சபைகள் அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தலாம்: அதற்கு வேண்டிய நிதியை கடனாகவும், வரியாகவும் திரட்டலாம். (யாழ்ப்பாணத்துக்கு மட்டும் மரவரியில் விசேட சலுகை அளிக்கப்பட்டுள்ளது.) சமூக சேவை, பொதுநலத் துறை போன்றவற்றிலும் அவற்றுக்கு பொறுப்புக்கள் உண்டு.

மாவட்டசபைகள் எந்த அமைச்சரின் கீழ் இயங்க இருக்கின்றனவோ, அந்த அமைச்சருக்கு பரந்த அதிகாரங்களை அளித்ததன்மூலம் இவைகளை மூடிமறைக்க பிரதமர் டட்லி முயன்றிருக்கிறார்.

டட்லி—செல்வா ஒப்பந்தப்படி, வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள முடிக்குரிய காணிகள் வழங்கப்படும் போது, தமிழர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் இந்தப் பகுதிகளில் வாழும் சிங்களவர்களின் கதியென்ன?

### வெளி நாட்டு உதவி

பொருளாதார சுபிட்சமும் ஐக்கியமும் இருந்தால் தான் ஒரு நாட்டில் சமஷ்டி ஆட்சி வெற்றிகரமாக நடை பெற முடியும். வடக்கு கிழக்கில் பொருளாதாரவளம் கிடையாது.

அப்படிப்பட்ட நிலையில் ஒரு அரசு ஏற்படுமானால் அது வெளிநாட்டுதவியைத்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கக் கட்சிக்குள் ஓர் ஐந்தாம் படையா?

நுணலும் தன் வாயால் கெடும் என்று தமிழில் ஓர் பழமொழி உண்டு. யாழ்ப்பாணப் பிரதிநிதி மகாகனம் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மாவட்ட சபைகளுக்கு எதிராகச் சம்மன்ஸ் இல்லாமல் ஆஜராகி முன்னுக்குப் பின் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டுத் தமிழ் மக்கள் முன் தனது அரசியல் அறிவீனத்தைக் 'குளோஸ் அப்பில்' காட்டி வருவதைப் பார்க்கும்போது மேற்கண்ட பழமொழி தான் ஞாபகத்துக்கு வருகிறது.

திரு. பொன்னம்பலம்இத்தனை காலமாக மாவட்ட சபைகளுக்கு எதிராக தெரிவித்த எந்த ஒரு கருத்தும் சக்திவாய்ந்ததாகக் காணப்படவில்லை. மாருக அவர் தாம் முன்பு வெளியிட்ட கருத்துக்களுக்கு முரணுக தாமே வேறு கருத்துக்களை கூறிவருகிருர்.

திரு, பொன்னம்பலத்துக்கு அடிக்கும் அரசியல் காய்ச்சல் நமக்குப்புரிகிறது. அந்தக் 'காய்ச்சல் வேகத்தில்' தான் மாவட்ட சபைகளை எதிர்த்து ஏதேதோவெல்லாம் கூறி வருகிருர்.

மாவட்ட சபை ஏற்பட்டு விட்டால் - அது தமிழரசுக் கட்சியின் சாதனையாகிவிடும். அதன் எதிரொலியாகத் தமிழ்ப் பகுதியில் தமது அரசியல் அந்திம காலம் நெருங்கிவிடும் என்பதை உள்ளூர உணர்ந்து கொண்டதனுல் தான் திரு. பொன்னம்பலத்துக்கு இந்த 'அரசியல்சுரம்' அடிக்க ஆரம்பித்திருக்கிறது. அடிக்காதா பின்னே?

### 'பொன்' மொழிகள்

★ மாவட்ட சபைகளால் தமிழர்களுக்குப் பிரயோசனமில்லை. ஆறு மாவட்டங்களில் மட்டும்தான் தமிழர்களுக்கு உரிமையிருக்கும்.

★ மாவட்ட சபை ஏற்பட்டால், வடக்கு, கிழக்கை விட்டு, தமிழ் மக்கள் ஏனைய பகுதிகளுக்குப் போக முடியாது—தொழில் செய்ய முடியாது.

## தெற்கே. சிறிமா சொல்வதை வடக்கே ஜீ. ஜீ. எதிரொலிப்பதேன்?

லாம் மகாகனம் திரு: ஜீ.ஜீ. பொன்னம்பலம் அப்போதைக்கப்போது பல்வேறு இடங்களிலும் கூறியதாகத் தினசரிப் பத்திரிகைகளில் வெளிவந்தவை. இந்தக் கருத்துக்களுக்குள்ளேயே எத்தனை முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதைத் தமிழ் மக்கள் கண்டு கொள்வார்களாக.

### மாவட்ட சபை என்றால் என்ன?

மத்திய ஆட்சியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்குப் பரவலாக்கி அந்தந்தப் பிரதேச மக்கள் தங்கள் பிரதேச அலுவல்களைக் கவனிக்க வகை செய்யும் ஓர் சனநாயக ஏற்பாடே மாவட்ட சபை.

எனவே முற்றிலும் சனநாயக அடிப்படையில் எழுந்த இந்த மாவட்டசபைக் கோரிக்கை பற்றிக் கொள்கை அடிப்படையில் திரு. பொன்னம்பலம் இதுவரை ஏதாவது கண்டனம் எழுப்பியிருக்கிருரா? இல்லையே!

''மாவட்ட சபை கூடாது-ஏனெனில் அது அதிகாரத்தைப் பரவலாக்கும் ஒருதிட்டம். சாதாரண மக்களிடம் அதிகாரம் போவதா? நான் அதை எதிர்ப்பேன்'' இப்படித் திரு. பொன்னம்பலம் கூறியிருந்தார்என்ருல் அவர் ஓர் கொள்கை அடிப்படையில் நின்று மாவட்ட சபைகளை எதிர்க்கின்ருர் என்ருவது கூறலாம். அப்படிக் கூறினுல் மக்கள் தம்மை ஓர் பிற்போக்குவாதி - சனநாயக பற்றற்றவர் என்று கூறிவிடுவார்களே யென்று அச்சம்.

### உள் நோக்கம் இதுதான்!

ஆனுல் திரு. பொன்னம்பலம் மாவட்ட சபைகளை



அடுத்தது, தமது 30 வருட அரசியல் வாழ்வில் எதையும் இதுவரை சாதிக்க முடியவில்லை—இந்தத் தமிழரசார் மாவட்ட

னர் 'முழு அதிகாரம்' உள்ள மாவட்ட சபை. வந்தால் அதை ஆதரிப்பேன் என்று கூறியிருந்ததேன்?'முழு அதிகாரம்' வந்தால் மட்டும் நாடு 'பிளவு' படாதென்பது அவரது எண்ணமா? நாடு பிளவு படாமல் அவர் ஆதரிப்பதாக முன்பு கூறிய சுயேச்சையான தமிழரசு மட்டும் எப்படி உருவாக முடியும்?

### சிறிமா வழியில் ஜீ ஜீ.

மாவட்ட சபையால் சிங்களவருக்கு ஆபத்து; நாடு பிளவுபட்டு விடும்;

27-வது சரத்துமட்டுமல்ல; மசோதாவிலுள்ள ஏனைய பாதகமான அம்சங்களையும் திரு. அமிர்தலிங்கம் எடுத்து விளக்கிப் பேசிய பின்னர் அவற்றை நீக்குவதாகப் பிரதமர் ஒப்புக் கொண்டார். திரு. அமிர்தலிங்கத்துடன் திரு. தொண்டமானும் சேர்ந்து கொண்டார்.

### செத்த பாம்பை அடித்த கதை

ஆனுல், பாராளுமன்றத்தில் பேசுவதற்கு முதல் 'சான்ஸ்' திரு. பொ.வுக்கு கிடைத்ததால் - அதைப் பயன்படுத்தி, மசோதாவில் கொண்டு வரவேண்டிய திருத்தங்களைப் பற்றி அடித்து முழக்கினுர். இந்தத் திருத்தங்கள் ஏற்கெனவே கொண்டு வரப்படுமென்று அரசாங்க பாராளுமன்றக் குழுவில்பிரதமரால் உறுதியளிக்கப்பட்டவையே. ஆகவே இவ்விஷயத்தில் திரு. பொ. வின் சூரத்தனம் 'செத்த பாம்பை மீண்டும் அடித்த' கதைதான் என்பது அரசாங்கக்கட்சி பா. உக்கள் பலருக்கு தெரியும்.

## குடியுரிமையை பிடுங்கியது அன்றைய சட்டம் குடியுரிமையை வழங்குவது இன்றைய சட்டம்

சபைகளைப் பெற்று விட்டால் என்ன செய்வது. அத்துடன் தமது அரசியல் வாழ்வு அதோ கதியாகிவிடுமே என்ற அச்சம். இவை இரண்டுமே திரு. பொன்னம்பலத்துக்கு மாவட்ட சபை என்னும் போது சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த நிலைக்குக் கொண்டு வருகிறது போலும்!

**கோவை மகேசன்**

### புதிய விளக்கம்

கடந்த வாரம் பத்திரிகை நிருபர்கள் சிலரை அழைத்து மாவட்ட சபைகளை தாம் எதிர்ப்பதேன் என்பதற்கு புதிய விளக்கங்களை கொடுத்திருக்கிருர். அதுவும் முன் பின் முரணுகவே காணப்படுகிறது.

★ ஐக்கிய இலங்கையே தமிழ் காங்கிரஸ் கொள்கை. மா. சபை நாட்டைபிளவுபடுத்திவிடும். அதனுல் அதை எதிர்க்கிறேன்.

என்று தென்னிலங்கையில் கூட்டாட்சிக் கட்சிகளும் திரு. ஹேமா பசநாயகா போன்றவர்களும் பொய்ப் பிரசாரம் நடத்தி சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக தூண்டிவிட்டுவரும் வேளையில், அதற்கு அனுசரணையாக மாவட்ட சபையால் நாடு பிளவு படும் என்று வடக்கில் குரல் கொடுக்கிருர் திரு. ஜீ. ஜீ.

கூட்டாட்சிக் கட்சிகளுக்கும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்குமிடையே இரகசிய உறவுகள் இருந்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் கடந்த சில மாதங்களாக பேசப்பட்டு வந்ததை—திரு. பொ. வின் கருத்து ஊர்ஜிதம் செய்வதாயிருக்கிறது. அது உண்மையானுல், தேசிய அரசாங்கத்தினுள் ஐந்தாம் படையொன்று இருக்க அனுமதிக்கலாமா என்பதை ஊன்றிச் சிந்திக்கும்படி பிரதமர் கவனத்துக்கு சமர்ப்பிக்கிறோம்.

### படு துரோகத்தனம்

அரசாங்கத்தின் ஒப்புக் கொள்ளப்பட்ட மாவட்ட சபைக் கொள்கையை எதிர்த்து எதிர்க்கட்சியினர் நடத்தும் பொய்ப் பிரசாரங்களை கண்டிக்க வேண்டிய ஒருவர்-அதுவும் அரசாங்கக் கட்சியொன்றின் தலைவர்-எதிர்கட்சிகளுக்கு அனுசரணையாகப் பேசுவது படு துரோகத்தனமானது.

அடையாள அட்டை மசோதா பற்றி மீண்டும் ஒரு பொய்ப் பிரசாரத்தை புங்குடுதீவில் கிளப்பியிருக்கிருர் திரு. பொ. இதுபற்றி சென்ற வாரச் சுதந்திரன் அரசியல் விமர்சனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடையாள அட்டை மசோதாவின் 27-ம் சரத்துடன் சேர்த்து அதைத் தமிழரசார் ஏற்றுக் கொண்டதாகவும், தம்முடைய முயற்சியினுல் தான் அது நீக்கப்பட இருப்பதாகவும் திரு. பொ. கூறியுள்ளார்.

இது முழுக்க முழுக்க ஓர் பொய்ப்பிரசாரம். அரசாங்கப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த

### ஏன் எதிர்க்கவில்லை?

அடையாள அட்டை மசோதா மீது திரு. நவரத்தினம் கூறியது அத்தனையும் சரியென்று சொன்னுராம் திரு. பொன்னம்பலம்.

திரு. நவரத்தினம் கருத்து சரியெனக் கண்டால் - திரு. பொன்னம்பலம் உண்மையில் அரசியல் நாணயஸ்தராக—தமிழ்மக்களின் பாதுகாவலராக இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும்? திரு. நவரத்தினத்துடன் சேர்ந்து மசோதாவை எதிர்த்து வாக்களித்திருக்க வேண்டாமா? ஏன் செய்யவில்லை?

அடையாள அட்டை மசோதா தமிழ் மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுத்துமென்று திரு. நவரத்தினத்தைப்போல உள்ளூர நம்பினுல், தமது மனசசாட்சிப் படி திரு. பொ. ஏன் நடக்கவில்லை.

### மனச்சாட்சிக்கு முரண்

மசோதாவின் 27 வது சரத்து திருத்தப்படாவிட்டால், தான் மசோதாவை எதிர்த்து வாக்களித்து விட்டு வெளியேறி விடுகிறேன் என்ருராம் ஜீ.ஜீ.

திரு. நவரத்தினம் 27வது சரத்தை மட்டும் எதிர்க்கவில்லை. மசோதாவே ஆகாது என்று கூறுகிருர். எனவே நவரத்தினம் சொன்னது சரியென்று கூறும் திரு. பொ. நவரத்தினத்தைப் பின்பற்றி மசோதாவை எதிர்த்து வாக்களிக்க ஏன் துணியவில்லை? திராணியில்லையா?

தமிழரசுக்கட்சி அடையாளஅட்டை மசோதாவை ஆதரித்தது—காரணம் அதனுல் தமிழ் மக்களுக்கு பாதகம் ஏற்படாது என்று உளப்பூர்வமாக நம்புவதால். தங்கள் மனச்சாட்சிக்கு மாருக நடக்கவில்லை தமிழரசார்.

ஆனுல் திரு. பொ. தனது மனச்சாட்சிக்கு மாருக நடந்து கொண்டுள்ளார் என்பதை அவரே தம்மை அறியாமல் கூறிவிட்டார். இதுவும் ஆரம்பத்தில் கூறியதுபோல நுணலும் தன் வாயால் கெட்ட கதை தான்.

(5-ம் பக்கம் பார்க்க)

## முன்னுக்குப் பின் முரண்படும் ஜீ. ஜீ. யின் சொத்தை வாதங்கள்!

★ மாவட்ட சபைகளை நிர்வகிப்பதற்குத் திறமையானவர்கள் தமிழ் மக்களிடையே இல்லை. நிதி வசதியும் இல்லை. இப்போதைய கச்சேரி நிர்வாகமே சிறந்தது.

★ மாவட்ட சபைகளைக் கடைசிவரை எதிர்ப்பேன்.

★ முழு அதிகாரங்களுடன் மாவட்டசபை மசோதா வருமாளுல் அதை ஆதரித்து வாக்களித்து விட்டு ராஜினுமா செய்வேன்.

★ தமிழ் மக்களுக்குச் சுயேச்சையான தனி அரசு கிடைக்குமாளுல் நான் அதை வரவேற்பேன்.

மேலே காணப்பட்ட 'பொன் மொழிகள்' எல்

எதிர்ப்பதன் உள் நோக்கம் என்ன என்பது அவரைப் புரிந்தவர்களுக்கு விளங்காமல் போகாது.

திரு. பொன்னம்பலம் ஓர் பூஷ்வாமனப்பான்மை கொண்டவரென்று கூறப்படுபவர். காலனித்துவ ஆட்சி முறைகளிலேயே ஆர்வம் கொண்டவர் என் என்றும் சொல்லப்படுபவர். எனவே ஆட்சி அதிகாரத்தை அரண்மனையிலிருந்து ஆலமரத்தடிக்கு கொண்டு வரக்கூடிய ஓர் ஆட்சியமைப்பை —அந்தந்தப் பகுதி மக்கள் தங்கள் அலுவல்களைத் தாங்களே பார்க்கக் கூடிய அதிகாரத்தை அவர்களிடமே வழங்கும் திட்டத்தை—திரு. பொன்னம்பலம் உள்ளூர வரவேற்பார் என்று எதிர்பார்க்க முடியாது.

★ மா. சபைக்கு கிராம சபையின் அதிகாரம் கூட இருக்காதென்று பிரதமர் கூறிவிட்டார்.

இவையிரண்டும் திரு. பொ திருவாய்மலர்ந்தருளியதாகப் பத்திரிகைகளில் வெளி வந்த கருத்துக்கள்.

### நாடு எப்படி பிளவுபடும்

மாவட்ட சபைக்கு கிராம சபைகளின் அதிகாரம் கூட இல்லையென்று பிரதமர் கூறியிருக்கிருரென்ருல், அப்படிப்பட்ட மாவட்ட சபைகள் அமைவதால் நாடு எப்படி பிளவுபடும்? திரு. பொன்னம்பலம் அதை விளக்குவாரா?

மாவட்ட சபைகள் அமை[illegible] மிருந்தால் திரு. பொ. முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரத்தினம் சொன்னது சரியென்றுகூறும் ஜீ. ஜீ.யாரே! அப்படியானால்நீர்ஏன் அடையாள அட்டை மசோதாவை எதிர்த்து வாக்களிக்க துணியவில்லை? திராணியில்லையா?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஒரு பிடி சோற்றுள் பூசணிக்காய்

ஆவரங்காலில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. பொ. முழுப் பூசணிக்காயை ஒரு பிடி சோற்றுக்குள் மறைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

1949-ம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்ததன் மூலமும், இன்று சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை ஆதரித்ததன் மூலமும் தமிழரசுக் கட்சி தமிழர்களுக்கு பெரிய பாதகம் செய்துவிட்டது என்று மாயக் கண்ணீர் வடிக்கிறார் திரு. பொ.

தமிழ் மக்கள் அவ்வளவு தூரம் முட்டாள்கள். அரசியல் விபரம்புரியாதவர்கள் என்று நினைத்துவிட்டாரா திரு. பொன்னம்பலம்?

1947-ம் ஆண்டுத் தேர்தலிலே 8 தமிழ்ப் பிரதிநிதிகளை மலையகத் தமிழர்கள் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பினர். இதைப் பொறுக்க முடியாமல், மலை நாட்டுத் தமிழர்களின் குடியுரிமைகளைப் பிடுங்கிவிடுவதன் மூலம் அவர்களுக்கு அரசியல் பலமில்லாமல் செய்து தங்களுக்கென்று பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிந்து அனுப்ப முடியாமற் செய்யும் நோக்குடன் தான் இந்தியர் பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் அன்று கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தைத்தான் திரு. செல்வநாயகமும் அவரது சகாக்களும் மூர்த்தண்யமாக எதிர்த்தனர். ஆனால் அச்சட்டத்துக்கு ஆதரவாக கை தூக்கி, மலையகத் தமிழர்களை அரசியல் அனாதைகளாக்க உதவினார் திரு. பொன்னம்பலம்.

இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் பிரதிபலிப்பு 1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தெரிந்தது. 1947-ம் ஆண்டு 8 பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பிய மலையகத் தமிழர்கள் 1952 தேர்தலின்போது ஒரு பிரதிநிதியைக் கூட தெரிவு செய்து அனுப்ப முடியவில்லை.

### மூடி மறைக்க முடியாது

இத்தகைய படுபாதகமான சட்டத்துக்குத்தாம் ஆதரவு அளித்ததன் மூலம் தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தை மூடி மறைக்க திரு. பொ. எப்படி முயன்றாலும் முடியாது.

இந்தியர் பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தையும், இப்போதைய இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தையும் திரு. பொ. இணைத்துப் பேசுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்றது.

இந்தியா பாகிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்தால் 10 இலட்சம் மலையகத் தமிழரின் அரசியல் உரிமைபறி போயிற்று. இப்போதைய சட்டத்தால் அவர்களில் ஓர் பகுதியினருக்கு இழந்த உரிமைகள் திரும்பக்கிடைக்க விருக்கின்றன. எனவே அதையும் இதையும் எப்படி பொருத்த முடியும்?

### ஒரு கேள்வி

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்ததன் மூலம் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு பாதகம் செய்து விட்டது என்று கூறியிருக்கிறார் திரு. பொன்னம்பலம். சரி, வாதத்துக்காக அதை ஒப்புக்கொண்டு திரு. பொ.வைநோக்கி ஒரேயொரு கேள்வியைத் தொடுக்கிறோம்.

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம் தமிழ் மக்களுக்குப் பாதகமானதென்றால்— அச்சட்டத்தை ஆதரித்து நீங்களும்தான் பாராளுமன்றத்தில் பேசினீர்கள்? நீங்களும்தான் அதை ஆதரித்து வாக்களித்தீர்கள்? ஏன் எதிர்த்து வாக்களிக்கவில்லை? உங்கள் வாதப்படி பார்த்தால் — தமிழரசுக் கட்சி துரோகம் செய்து விட்டது என்றால் நீங்கள் செய்தது படு துரோகமல்லவா? இதற்கு என்ன பதில்?

எனவே, திரு. பொன்னம்பலத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம்—தமிழ் மக்களிடையே பொய்ப் பிரசாரங்கள் நடத்துவதன்மூலம் உங்கள் கட்சியை வளர்த்துவிட முடியும் என்று மனப்பால் குடிக்காதீர்கள்—தமிழ் மக்களை ஆபத்துக்கள் எதிர்நோக்கும் இன்றைய நிலையில் ஐக்கியத்துடன் தமிழ்ப் பிரதிநிதிகள் செயலாற்றக் கூடிய ஒரு சூழ் நிலையை ஏற்படுத்த பாடுபடுங்கள்!

## மாவட்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் எதிர் பார்க்கும் நிலை வரும்.

பிரிட்டிஷாருக்கும், அமெரிக்கருக்கும் இந்த உண்மை தெரியும். அமெரிக்கர்கள் பெரும்பான்மை சிறுபான்மைச் சச்சரவுகள் உள்ள இடங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள்.

தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை தற்போது தான் வாஷிங்டன் சென்றுள்ளார். இவ்வித நோய்கள் இந்தியாவுக்கு மட்டுமல்ல; எமக்கும் உண்டு.

அமெரிக்க தகவல் பகுதி யாழ்ப்பாணத்தில் தனது கிளையை நிறுவியிருக்கிறது. சிங்கப்பூரில் நடைபெறும் ஓர் தமிழ் இந்து திருவிழா பற்றி அமெரிக்க தகவல் பகுதியால் வெளியிடப்படும் 'பிரீ வோல்ட் ஹொறாரிசன்ஸ்' என்ற சஞ்சிகை மிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருக்கிறது, பூகோள ரீதியாக திருமலைத் துறைமுகத்தின் அருமையை அமெரிக்கர்கள் தெரியாதவர்களல்ல.'

## குடியேற்றக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோமசுந்தரம் என்னும் ஒருவர் கொழும்புக்கு வந்து கப்பஹா எம். பி. எஸ். டி. பண்டாரநாயகாவுடன் சென்று காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சரை இது விடயமாகப் பேட்டி கண்டுள்ளாராம்.

திரு. பண்டாரநாயாகவுடன் 78 பேர் அமைச்சரைக் காண வந்தனர் என்றும், அவர்களில் சோமசுந்தரம் ஒருவரே விசுவமடுக் குளத்தைச் சேர்ந்தவர் என்றும் ஏனையோர் கொழும்பிலே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் என்றும் தெரிகிறது.

## அறிஞரும் கவிஞரும் மறைந்தனர்

பெரும் பேராசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை தமிழ் கூறும் நல்லுலகை விட்டு மறைந்து விட்ட அதிர்ச்சி மிக்க செய்தி சென்ற வாரம் நம்மை திடுக்கிட வைத்தது.

பேராசிரியர், தமிழை வெறும் புகழுக்காகவோ தொழிலுக்காகவே போற்றிய வரல்லர். அள்ள அள்ளக் குறையாத ஆசை அவருக்கு தமிழின் மீது—அதனால் வாழ் நாளெல்லாம் தமிழ்த் தொண்டு புரிந்தார்.

1903 ம் ஆண்டு ஜுலை 2 ம் திகதி பிறந்த கணபதிப்பிள்ளையவர்கள் 29வருடகாலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக கடமை புரிந்தார். இன்று பல்துறைகளிலும்முன்னணி வகிக்கும் பல பிரமுகர்கள் அவரது முத்திரை பட்டு உருவானவர்களே. இலங்கைப்பல்கலைக் கழகத்தின் முதலாவது துணை உபவேந்தராக பணியாற்றிய தமிழ் பெருமகன் இவரே.

இப்பெரியாரின் இறுதிச் சடங்கில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. [illegible] வம் உட்பட அநேக பிரமுகர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த பேராசிரியருக்கு சுதந்திரன் தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் நமது அனுதாபத்தை காணிக்கையாக்குகிறோம்.

பேராசிரியர்கணபதிப் பிள்ளையுடன் மற்றொருமூதறிஞரும் சென்ற வாரம் நம்மை விட்டுப் பிரிந்தார். அவர் தான் கவிஞர் யாழ்ப்பாணன். இவரது இயற்பெயர் திரு. வே. சிவக்கொழுந்து. 1946-ம் ஆண்டு தொடக்கம் கவிதை எழுத ஆரம்பித்தஇவர்இறக்கும்வரையில் அதைக் கைவிடவே இல்லை. கவிதைக் கன்னி, மாலைக்கு மாலை, முல்லைக்காடு ஆகியன இவரது கவிதை தொகுப்புக்கள். நாவல் துறையிலும் இவருக்கு ஈடுபாடுண்டு. இவரது ஜீவயாத்திரை என்னும் நாவல் அண்மையில் வெளியிடப் பட்டது.

கவிஞரின் மறைவு ஈழத் தமிழிலக்கிய உலகுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

—ஆ-ர்.

# இலங்கைப் பிரஜா....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிடைக்க முடியாமலிருக்கிறது.

சில இடங்களில் துவேஷம் பிடித்த அதிகாரிகள் சிலர் படிவங்களை வைத்துக் கொண்டே, இல்லை என்று கையை விரித்து விடுவதாகவும், வேறு சிலர் இலங்கைக் கூப்பன் புத்தகம் உள்ளவர்களுக்கே படிவம் வழங்கப் படுமெனக் கூறுவதாகவும் தெரிகிறது.

படிவங்கள் பெறுவதற்குக் கூப்பன்கள் தேவையில்லையென்றுகமிஷனர் அறிவித்த பின்னரும் கூட இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து வருவதாகப் புகார் கூறப் படுகிறது.

இது தவிர தோட்டங்களில் பணியாற்றாத மக்களுக்குப் புதியதொரு பிரச்சினை தோன்றியுள்ளது. தோட்டங்களில் பணியாற்றாதவர்கள், தங்கள் விண்ணப்பத்துடன் அனுப்பும் புகைப்படத்தின் பின்புறத்தில் தாம் வாழும் பகுதிக் கிராம சேவகர் அல்லது மாவட்ட காரியாதிகாரியால் குறித்த நபரைத் தமக்குத் தெரியும் என்று அத்தாட்சிப் படுத்தப்பட்டுக் கையெழுத்திடப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

ஆனால், புதிதாக வந்துள்ள கிராமசேவகர்களும் மாவட்ட காரியாதிகாரிகளும், நீண்டகாலமாக வசிக்கும் மலைநாட்டுத் தமிழர்கள் பலரைத் தமக்குத் தெரியாது என்று கூறிக் கையெழுத்து வைக்க மறுத்து வருகின்றனர். இதனால் ஆயிரக் கணக்கானோர் விண்ணப்பத்தை அனுப்ப முடியாது தடுக்கப்பட்டுள்ளனர்.

அத்தாட்சிப்படுத்திக் கையெழுத்திடும் பொறுப்பைக் கிராமசேவகரிடமும், டி. ஆர். ஓக்களிடமும் விடாது சமாதான நீதவான்கள், வழக்கறிஞர்கள், நொத்தாரிசுகள் போன்றவர்களிடம் விடுதலே இச்சிக்கலைத் தீர்க்க ஒரே வழிஎன்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பதவிகளை...


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேடைக்கு போனாலோ அந்தர்த்தியானமாகி விடுவார். அவர்மட்டுமல்ல, அவரது கட்சிக்காரர்கள் எல்லோருமே அப்பேர்ப்பட்ட சூரர்கள் தான்.

ஆகவே மேடையில் விவாதிக்கும் சவால்இருக்கட்டும்; கடந்த தேர்தலின் போது தமிழரசுக்கட்சி மாவட்ட சபைகளை வென்றெடுப்பதற்கு தமிழ்மக்களின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் திரு.ஜீ.ஜீ.யோ அவரது கட்சியினரோ, மாவட்ட சபைகளை எதிர்ப்பதற்கு தமிழ் மக்களிடமிருந்து அதிகாரத்தைப் பெறவில்லை.

ஆகவே மாவட்ட சபை குறித்து மக்களின் மன நிலையை அறிந்து கொள்ள திரு. பொன்னம்பலம் விரும்பினால், உடனடியாக தனது பதவியை ராஜினாமாசெய்துவிட்டு தமது மாவட்டசபை எதிர்ப்பு கொள்கையை முன் வைத்து போட்டி போடமுன்வரட்டும். வாய்ச்சவடால் அடிப்பதை விட்டு இதற்கு துணிவார்களா தமிழ் காங்கிரசினர்?


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியங்கள் கால வாரியாகவும் துறை வாரியாகவும் பிரிக்கப்படுதல் வேண்டும்

## மூத்ததமிழையும் அதன்வளர்ச்சியையும் கண்டறிவதற்கு இதுவே வழி!

ஒரு சமுதாயத்தின் இலக்கியவரலாறு பெரும்பாலும், அச்சமூகத்தினுடைய வாழ்க்கை வரலாற்றின் எதிரொளியும் எதிரொலியுமே. மரமானது மேட்டு நிலத்திலே நின்றாலும், தன்னைச் சுற்றி எட்டிய மட்டும் உள்ள அகலத்திலும் ஆழத்திலும் தன் வேர்களை அனுப்பி, அங்கெல்லாமிருந்து பெற்ற வளத்தினாலேயே வளர்கிறது. இலக்கிய ஆசிரியன் ஒரு தனி மனிதனேயானாலும், ஒரு வகையில் தனது சமூகத்தினரிடமிருந்து அவன் தனித்தே வாழ்கிறானென்றாலும், அவன் வாழும் சமூகமே, தன் பல அம்சங்களாலும் அவனுடைய படைப்புக்கு ஊட்டமளிக்கிறது. அளிக்கவே எந்த ஒரு இலக்கியமும், ஏதாவது ஒரு வகையில் தனது சமகாலச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாகவே உருவாகிறது.

அரசியல் வரலாறு என்று இப்போது நாம் படிக்கின்ற பாடம், சமுதாயங்களின் அவ்வக் காலத்திய புறத்தோற்றங்களை மட்டுமே நமக்குக் காட்டுகிறது. நாம் படிக்கும் புறத்தோற்றங்களின் மாறுதலுக்குக் காரணமாக அமைவது அவ்வச் சமுதாயங்களின் அகவாழ்க்கை. அதில் ஏற்படும் மாறுதலே சமுதாய வாழ்வின் நிலைபேறுகளையோ மாற்றங்களையோ நிர்ணயிக்கிறது. இந்த அகமாறுதலை இலக்கியம் நமக்காக அவ்வப்போது பதிவு செய்து வைக்கிறது. எனவே, ஒரு சமூகம் தனது எதிர்கால நல்வாழ்வுக்குத் திட்டங்கள் வகுக்குமுன், அதன் இறந்த கால அகவாழ்வை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இதைத் தெரிந்து கொள்ளவே இலக்கிய ஆராய்ச்சி பயன்பட வேண்டும்.


தமிழகம் என்னும் மக்கட் சமுதாயம் நீண்டவாழ்க்கை வரலாறு உடையது; நீண்ட இலக்கிய வரலாறும் உடையது. பல்வேறு காரணங்களால், தமிழக அரசியல்வரலாறே இன்னும் சரிவர வரையப்படாமல் கிடக்கிறது. இலக்கிய வரலாறு பற்றியோ, சொல்லவே வேண்டுவதில்லை; அன்று தொட்டு இன்றுவரை உள்ள நீண்ட இலக்கியங்களை, தமிழ்ச் சமூகத்தின் பல்லாயிரக் கணக்கான ஆண்டு நெடுவரலாற்று மேடு பள்ளங்களின் பல்வேறு பிரதிபலிப்புக்களை, ஒன்றாகக் குவித்துப் போட்டுக்கொண்டு ஒரு சிலர் அதைச் சுற்றிக் காவல் இருக்கிறார்கள். அந்தப் பெரிய அம்பாரத்தை வகைப்படுத்தவோ, வகுத்துப் பார்த்து அதன் ஒவ்வொரு மணியின் தரத்தையும் மதிப்பிடவோ தமிழறிஞரானோர் திட்டமிட்டு முயலவே இல்லை. எனவே அந்த மணியின்ஒளி இன்றையத் தமிழ்ச் சமூகத்துக்கு எட்டவே இல்லை.

'நாம் யார்? மனிதசமுதாயத்தில் நமது தரம் யாது? எதிர்காலத்தில் நாம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்? அதற்கு நமக்குள்ள பாரம்பரியத் தகுதிஎன்ன? நம்மை அறியாமல் நம்முள் ஊடுருவி நிற்கும் குறையும் நிறையும் எவைஎவை?' இவைபோன்ற கேள்விகளை எழுப்பாமல் எந்தக் கூட்டத்தினரும் சிறப்படையமுடியாது. ஆயினும், ஏனோ, தமிழர்கள் மட்டும் இத்தகைய சிந்தனைகளை எழுப்பும் எண்ணமே இல்லாமல், மேற்போக்கான சில சம்பிரதாயப் பழக்க வழக்கங்களையே வாழ்வு என்று கருதிக் கொண்டு இருந்து முடிந்து போகிறார்கள்.

இந்த இருட்டைக் கிழித்து, தமிழர்களைச் சூழ்ந்துள்ள அசமந்தப் புற்றை உடைத்து, அவர்களை விடுவிக்க வேண்டிய பணியே இப்போது தமிழகத்தில் நடைபெற வேண்டிய முதற் பணி.

மூவாயிர ஆண்டுத் தமிழ் இலக்கியங்களை ஒன்றாகக் குவித்துப் போட்டுக் கொண்டிருக்கும்வரை, அதைப் பார்க்கும் யாருக்கும் அதன் புகழை மட்டுமே பாடத் தோன்றும். மிகப் பெரியதாக இருப்பது வியப்புணர்ச்சியை ஏற்படுத்துவது இயல்புதானே? ஆனால் நமக்கு வேண்டியது இந்த ஆச்சரியக் குறியல்ல; அதைவிலக்கி உள்ளே சென்று ஒவ்வொன்றையும் விழித்துப் பார்க்கும் கேள்விக் குறியே நமக்கு இப்போது தேவை.

தமிழ் இலக்கியம் மொத்தமாகக் கிடப்பதால் அதன் பெரும் பகுதி நமக்குத் தெரியவில்லை. அகம், புறம், பக்தி, காவியம், புராணம், பிரபந்தம், உரை, நடை என்றமுறையில், ஒருபெரும் போக்கான காட்சியே நமக்குக் கிடைக்கிறது. இவைகளுக்குள்ளே, இவைகளை இலக்கியத்தில் ஏற்றிய சமூக அகமாறுதல்கள் எவை எவை என்பது நமக்குஇன்று



சாலை இளந்திரையன்

தெரியவில்லை. இதைத் தெரிந்து கொள்ளும் போதுதான் தமிழர்கள் தங்கள் வரலாற்றை முறையாகவும் முழுமையாகவும் தெரிந்து கொண்டவராவார்கள்.

இந்த நோக்கம் நிறைவேற, முக்கியமான சில பணிகள் உடனடியாக நடந்தாக வேண்டும். முதலாவது, மேற்போக்கான சில பெரிய வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கியத்தைச் சில பிரிவுகளாகப் பகுக்க வேண்டும். சங்கத் தமிழ், இடைக் காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்று பிரிக்கலாம்; அல்லது சங்கத்தமிழ், நீதித் தமிழ், பக்தித் தமிழ், காவியத்தமிழ், புராணத்தமிழ், பிரபந்தத்தமிழ், தழுவல் தமிழ், உரைநடைத் தமிழ் என்று பிரிக்கலாம். இப்படி ஏதாவது ஒரு வகையில் பிரித்து, ஒவ்வொன்றின் பல்வேறு அம்சங்களையும் நோக்குவதால் நமக்கு எத்தனையோ புதிய உண்மைகள், நம் இலக்கியத்தைப் பற்றி இதுவரை நாம் சிந்தித்தே இராத உண்மைகளெல்லாம் புலப்படக்கூடும். அவைகள் நமது சமுதாய வாழ்வைப்பற்றிய புதுப் புதிய உண்மைகளையும் நமக்கு விளக்கக்கூடும்.

சான்றாக, 'ஒருகாலத்தில் அகமும் புறமுமாக இருந்த தமிழ் இலக்கியம், அடுத்த காலக்கட்டத்தில், புறத்தின் ஒரே ஒரு கூறாகிய நீதியின் பக்கமாகச் சாய்ந்தது ஏன்? நீதிப்பாடல்களாகச் சென்ற தமிழ் இலக்கியம், திடீரெனப் பக்திப் பாடலாகப் பொங்கியதற்குக் காரணமாக அமைந்த சமுதாய அகமாறுதல்கள் என்னென்ன? உயர் மனிதனாக வான்மீகத்தில் வளரும் இராமன், தமிழில் உருவாகும் போது கடவுளாகவே மாறிவிட்டது ஏன்?...,இந்த மாறுதல்களுக்கு ஒருவரோ சிலரோவாகிய இலக்கிய ஆசிரியர்கள் மட்டும் காரணமாக இருக்க முடியாது; சமுதாய அகவாழ்வே (அல்லது அப்படியானதொரு தோற்றமே) இலக்கிய ஆக்கத்தில் இந்த மாறுதல்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

தவிர, சங்க இலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியமல்ல; நீண்ட பல நூற்றாண்டுகளாக அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி அது. அதில் விவரிக்கப்படும் சமுதாயம் ஒரேயொருமாதிரி ஆனதன்று; பல்வேறு காலக் கட்ட மாறுபட்ட சமுதாய நிலைகளைக்காட்டுகிறது சங்க இலக்கியம். கி. மு. பதினைந்தாம் நூற்றாண்டுப் பாடலும் சங்க இலக்கியம்; கி. பி. இரண்டாம் நூற்றாண்டுப் பாடலும், இன்று நம்மைப் பொறுத்த அளவில் சங்க இலக்கியமே. இந்த மொத்தத்தைவைத்துக்கொண்டே

(7-ம் பக்கம் பார்க்க)

---

**அத்தியாயம் - 17.**

### பதியைக் கொன்ற பாதகி

## இரத்தப் பிசாசு

ஒலிப்பதிவுக் கருவியில் என் குரல் ஒலிக்கத் தொடங்கியது.' என்று கூறிவிட்டு கீதாவின் முகத்தை டாக்டர் பார்த்த போது மேலே சொல்லுங்கள் என்றாள் ஆவலுடன் கீதா.

டாக்டர் தொடர்ந்தார்.

'மல்லிகா, நீ என்னை ஏமாற்றி விடமாட்டாயே. நான் உன் கணவன். கணவன் உயிருக்காக காலனுடன் போராடிய சாவித்திரி பரம்பரையில் வந்த பெண்ணல்லவா நீ. நீ என்னை ஏமாற்றமாட்டாய். ஆனால் ...சில சந்தர்ப்பங்களில் பெண்ணானவள் சிறு ஆசைக்கு அடிமையாகிப் பெரும் வெகுமதிகளைக் கூட இழந்து விடுகிறாள். அது போல நீயும் நடந்து விட்டால் உன் வாழ்க்கையில் அளப்பரிய வாழ்வையே இழந்து விடுவாய். கணவனில்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? ஆனால்...ஆனால்... என்று சுற்றி விட்டுப் பின்பு எதுவித ஓசையுமின்றிச் சுழன்று கொண்டிருந்தது ஒலிப்பதிவுக்கருவி.

'சுத்த மடையன், உயிர் போய்க்கொண்டிருக்கிறது. இந்நேரம் வேதாந்தம் பேசி வைத்துவிட்டுச் சென்றுள்ளான் மல்லிகா! நாமிருவரும் நட்பு வைத்திருப்பது அவனுக்குத் தெரியாது போலும். தெரிந்தால் இந்தப்பயங்கரப் பரிசோதனை தொடங்கியிரான். அப்படிச் செய்தாலும் இந்தக் குளிகையின் மர்மத்தை உனக்குக் கூறியிருக்க மாட்டான்.' என்று பாஸ்கர் கூறினான்.

'பாஸ்கர்! அவர் ஒரு அப்பாவி! எனக்கு உண்மையைக் கூறிவிட்டார். அதே வேளையில் கண்டிப்பும் நிறைந்தவர். என் மீது நிறைந்த நம்பிக்கையுடையவர். இதுவரை நமக்கிடையே இருந்த உறவு அவருக்குத் தெரிந்திருக்க முடியாதுதான் என அவள் கூறினாள்.

'மல்லிகா டாக்டரின் ஏராளமான சொத்து இனி நமக்குத்தான். டாக்டரின் பயங்கரப் பரிசோதனை அவர் உயிருக்கே உலை வைத்து விட்டது மல்லிகா! எங்கே அந்தக் குளிசைகள் எடுத்துவா. நாமிருவரும் இளமைமாறாது இன்புற்றிருக்க உன் கணவனால் கொடுக்கப்பட்ட சஞ்சீவி மாத்திரைகள் என்று அவன் மனம் போனபடி கூறிக் கொண்டிருக்கையில் மல்லிகா குளிகைப் போத்தலுடன் என் அருகே வந்தாள். என் நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள். அவள் இதழ்களிலிருந்து 'டாக்டர் உங்கள் உடமைகளை வெறுக்கவில்லை. உங்களையும் வெறுக்கவில்லை. ஆனால் உங்களைவிடப் பாஸ்கரிடம் அளவற்ற அன்புண்டு. அவரோடு [illegible] லாவிட்டால் பூரணமாக அவரை நான் அனுபவிக்கலாம் அல்லவா? 'என்ற நச்சுவார்த்தைகள் உதிர்ந்தன. என்னால் பேசமுடியாத நிலை. உடல் பிணம்போன்று காட்சியளித்தாலும் புறவுணர்வுகளை கிரகிக்கும் சக்தியிருந்தது.

**கே. [illegible] ஆனந்[illegible]**

அவள் அப்படிச் சொன்ன சில நிமிடங்களில் பாஸ்கரைத் தழுவி முத்தமிட்டிருக்கணும். அவர்கள் உரையாடலும் இடைஇடையே எழுந்த ஓசையும் அவர்கள் நிலையை எனக்கு உணர்த்தின. அதைவிட அவர்கள் பேசுவதை ரேப்ரிக்காட்டின் வேறு ஒரு நாடாபதிவு செய்து கொண்டிருந்தது. அதேவேளையில் நான் படுத்துக் கிடந்த அறையில் நடந்த விடயங்களனைத்தையும் ஒரு புகைப்படக் கருவி படம் பிடித்துக் கொண்டிருந்தது.

மக்களுடைய எத்தனையோ தில்லு முல்லுக்களை ஆண்டவன் படம் பிடித்துக் கொண்டிருப்பதைப் போல மல்லிகா—பாஸ்கர் நடத்திய திருவிளையாடல்களை அவர்களுக்குத் தெரியாமல் ஒரு கருவி படம் பிடித்துக் கொண்டிருப்பதைஉணர்ச்சிவெறி கொண்ட அவர்கள் உணரவில்லை. உலகில் எத்தனையோ அதிசயங்கள் நினைக்கு முன்பே நடந்துவிடுவதுண்டு.

ஆனால் மல்லிகா-பாஸ்கர் நினைப்பை செயலாக்கத் தடையாயிராது அவர்கள் துரித கதியில் முன்னேற நானே திட்டம் வகுத்தேன். ஏன் வகுத்தேன்? ஒரு வழியில் நானும் குற்றவாளி என நீர்நினைக்கலாம். ஆனால் என் நிலையில் இருக்கும் எவரும் மல்லிகாவைக் கொலையே செய்திருப்பான். ஆனால் ...ஆனால்... ஆராய்ச்சியிலேயே பல நாள் சிந்தித்துச் சிந்தித்துச் செயலாற்றிய என் சிந்தனை கணவனுக்கு அதுவும் தன்மீது அன்பும், உயிரும் வைத்திருக்கும் கணவனுக்கு துரோகம் செய்தவளை என்னன்னவோசெய்ய வேண்டுமென்று துடித்தது.

ஆனால் அவள் மீது நான் வைத்திருந்த பாசம் போலியாகவோ அன்றி நடிப்பாகவோ இருந்திருந்தால் அப்படி நடந்திருப்பேன். அது மட்டுமல்ல கீதா பல வழியாலும் நான் நொந்து போயிருந்த போதே பலரது முயற்சியால் மல்லிகா என் மனைவியானாள். அவள் நல்லவளாக நடித்தாள். சொந்தக்கணவனை எனக்கு பக

(7-ம் பக்கம் பார்க்க)

நமது தொடர்கதை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடிக மன்றங்களுக்குள் மோதல்கள் மூளட்டும்!

## "விவசாயி" இலவச சினிமாப் போட்டி

—

### சரியான விடையும் பரிசு பெற்ருேர் விபரமும்

—

சரியான விடை:

1. விவசாயி.
2. எம். என். நம்பியார், விஜயகுமாரி,
3. 2686 ரகங்கள்.
4. 4 சண்டைக் காட்சிகள்.
5. இல்லை.
6. தாழம் பூ.

பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள்

1-வது பரிசு-6 மேல் வகுப்பு டிக்கெட்டுகள், மு. சிறிகுமார், சித்தியார் வளவு, கந்தரோடை சுன்ணுகம்.

2-வது பரிசு-4 மேல் வகுப்பு டிக்கட்டுகள். ம. இளங்கோ, மாணிக்க வளவு கரணவாய் தெற்கு கரவெட்டி.

3-வது பரிசு 3—மேல் வகுப்பு டிக்கட்டுகள். மீ. லெ. மெ. ஜமாலுத்தீன், ஆலையடிப் பாடசாலை வீதி, மருதமுனை, கல்முனை.

ஆறுதல் பரிசாக, தலா 2 மேல் வகுப்பு டிக்கட்டுகள் பெற்ற 3 அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:
கே. தியாகராசா, 722, புளூமெண்டால் வீதி, கொழும்பு.
நாகேஸ்வரி நடராசா, கல்லூரி வீதி, சித்தங்கேணி.
திருமதி, இராணி ராஜசிங்கம், 51/12, சென்ட் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## அப்போதே சாதனை பெருகும்

### நடிகர்கள் அரசியலில் ஈடுபட்டால் கலைபாதிக்கப் படுமென்பது முட்டாள்தனமான கூற்று

### "தேவாதிதேவனுக்கு" பதில்

கடந்த 4-5-68 சுதந்திரனில் "தேவாதி தேவன்" எழுதியிருந்த கட்டுரையைக் கண்ணுற்றேன். நடிகர்கள் பெயரால் மன்றங்கள் வேண்டாம் கலையின் பெயரால் சங்கங்கள் அமைப்போம் என அறை கூவல் விடுத்திருந்தார். நான் கூறுகிறேன் கலையின் பெயரால் சங்கங்கள் அமைத்து சாதிக்க முடியாததை நடிகர்கள் பெயரால் மன்றங்கள் அமைத்து சாதிக்க முடியும். தவிர கட்டுரை ஆசிரியர் நடிகர்கள் பெயரால் மன்றங்கள் ஏன்கூடாது என்பதை விளக்கத் தவறிவிட்டார் அதை விடுத்து நடிகர்களைத் தாக்கி எழுதியுள்ளார். குறிப்பாக எம். ஜி. ஆரை தாக்கியே எழுதியுள்ளார். கந்தளாய் எம். ஜி. ஆர். ரசிகர்கள் மன்ற செயலாளர் என்ற முறையில் பதில் கொடுக்க வேண்டி இருக்கிறது!

#### கலை பாதிக்காது

"நடிகர்களின் ரசிகர் கோஷ்டி பெருகுவதனுல் அப்படிப்பட்ட நடிகர்களை அரசியலில் இழுத்துப்போடுகின்றனர்" என்று குறிப்பிட்டிருந்தார் கட்டுரை ஆசிரியர்! நடிகர்களும் மனிதர்கள் தான். அவர்கள் அரசியலில்ஈடுபடுவதால்கலைபாதிக்கப்படமாட்டாது. எல்லா நடிகர்களும் அரசியல் வாதிகளாக முடியாது. அதற்கும் அரசியல் ஞானம் தேவை! எம், ஜி. ஆர். ஒரு நடிகர் அத்துடன் அரசியலில் ஈடுபட்டுள்ளார். எம். ஜி. ஆரின் அரசியல் ஆதிக்கம் தமிழகத்தில் மட்டுந்தான். வெளிநாடுகளில் செல்லாது. வெளிநாடுகளில் அரசியலைப் பற்றிப் பேசுவதில்லை. இலங்கை ரசிகர்கள் எம். ஜி. ஆரின் நடிப்பை ரசிக்கிருர்களே தவிர கட்சிக்காக அல்ல. கலை வேறு, அரசியல் வேறு.

#### ஏற்றுக் கொள்ள முடியாது

"வசன கர்த்தாக்களுக்கும் கவிஞர்களுக்கும் கிடைக்க வேண்டி பாராட்டை நடிகர்கள் தட்டிக்கொண்டுபோய் விடுவதாக" கூறும்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அனேகமாக எம்:ஜி.ஆருக்கு வசனம் எழுதும் கர்த்தாக்களும் கவிஞர்களும் எம். ஜி. ஆரை மனதில் வைத்துக் கொண்டுதான் எழுதுகிருர்கள். எம். ஜி. ஆரின் கொள்கைகளைப் பிரதிபலிக்கக் கூடிய வசனங்களாகவும் பாடல்களாகவும் எழுதுகிருர்கள். சில வசன கர்த்தாக்கள் தங்களை விளம்பரம் செய்ய நடிகர்களைப் புகழ ஆரம்பித்து விடுகிருர்கள். உதாரணமாக "கலங்கரை விளக்கம்" படத்தில் 'அந்த வில்லனுக மாறி திறமையை காட்ட முடியாதா?' என்று அடுத்து கேட்டிருந்தார். கதாநாயகனுக நடிக்கும் எம். ஜி. ஆரை, சிவாஜியை, வில்லனுக்கி வில்லனுக நடிக்கும் நம்பியாரை' கதாநாயகனுக்கி ஒரு படம் வந்தால் அதை ரசிகர்கள் எப்படி ரசிப்பார்கள் என்பதை 'தேவாதிதேவன்' உணருவாரா? அமோக மக்கள் ஆதரவைப் பெற்ற நடிகன் வில்லனுக நடித்தால் மக்கள் வரவேற்க மாட்டார்கள் என்பதை அண்மையில் வந்த படங்கள் நிரூபித்து விட்டது. அதனுல் தான் இரட்டை வேடம் தாங்க வேண்டியிருக்கிறது என்பதை கட்டுரை ஆசிரியர் உணர வேண்டும்.

#### போட்டி தேவை

'தேவாதி தேவன்' எழுதியிருந்த எந்தக் கருத்தும் நடிகர்களுடைய பெயரால் மன்றங்கள் வேண்டாம் என்ற கருத்தை பிரதி பலிக்கவில்லை ஏதோ நடிகர்களை தாக்கியுள்ளார். கலை மன்றங்கள் அதிக நாட்கள் நீடிக்கவும் மாட்டா. ஒரு காரியத்தையும் சரி வர செய்து முடிக்காது. நடிகர்களின் மன்றங்கள் ஏற்பட்டால் போட்டி ஏற்படும். போட்டி ஏற்பட்டால் சாதனைகள் கூடும். ஆகவே எம். ஜி.ஆர். மன்றங்கள், சிவாஜி மன்றங்கள், எஸ். எஸ். ஆர் மன்றங்கள்ராதா மன்றங்கள் தேவை.

**பி. ஜோசப் நோமன்**
**எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்**
**கந்தளாய்**

## கண்டக்டர்களுக்கும் சிங்களம் வேண்டுமாம்!

இ. போ. ச.வில் கடமையாற்றும் கண்டக்டர்கள் அனைவரும் ஒரு வருடத்துள் சிங்கள மொழியில் தேர்ச்சியடைய வேண்டுமென்று புதிய உத்தரவு ஒன்றை இ. போ. ச. விடுத்துள்ளது. புதிதாக கடமையில் சேருவோர் ஒருவருட காலத்துள் சிங்களத் தேர்ச்சி பெருவிடின், அவர்கள் நியமனங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட மாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் சிங்களவர்களான கண்டக்டர்கள் தமிழைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எதுவித கட்டுப்பாடும்விதிக்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

## கருத்துமேடை

நல்லவரை நாம் இழந்தாலும் நாடு இழக்கக் கூடாது' என கோபால கிருஷ்ணன் பேசும் வசனத்தையும் விவசாயி படத்தில் "கடவுளைக் கண்ட நம்பிக்கையில் செல்கிறேன்" என்றுவிஜயகுமாரி பேசுவதும் இதற்குச் சான்று பகர்கின்றது. இந்த இடத்தில் வசன கர்த்தாதான் நினைவுக்கு வருகிருர்.

#### யாரைக் குறிப்பிடுகிருர்?

ரசிகர் கூட்டம் கதாநாயகனுக நடிக்கும் வெள்ளிகளுக்கே தங்கள் முழு ஆதரவையும் காட்டுவது எவ்வளவு மதியீனமோ அதை விட மதியீனம் நடிப்பவர்களின் நடிப்புத் திறமையை ரசிக்காமல் வெறுப்பது' இந்த வாக்கியத்தை சிந்தித்துப் பார்த்தால் ஒரு உண்மை புரியும். அந்த வெறுக்கப் படும் நடிகர் யார்? வில்லனுக நடிப்பவர்களையா? அல்லது கதாநாயகனுக நடித்தும் மக்கள் மத்தியில் அமோக வரவேற்பை எடுக்க முடியாது திண்டாடும் சாதாரணதிலகத்தை குறிப்பிடுகிருரா புரியவில்லை.

#### படம் ஓடுமா?

'கதாநாயகனுக நடிப்பவர்கள் அடி உதை வாங்கும்

## தமிழ் இலக்கியங்கள்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பலர், சங்ககாலச் சமுதாயம் பழக்க வழக்கம் முதலியவை பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்ருர்கள். இப்பாடல்களுள் மிக முந்தியனவும் மிகப் பிந்தியனவும் உண்டு என்பதையோ, அவையிரண்டும் தமிழ்ச் சமுதாய வரலாற்றில் வெவ்வேறுபட்ட நிலைகளைச் சித்தரிக்கின்றன என்பதையோ அவர்கள் உணர்வதே இல்லை. அவ்வளவு ஏன்? இந்தப்பாடல்கள் தொகுக்கப்பட்ட மிகப் பிற்காலத்தில் பாடிச் சேர்த்த கடவுள் வாழ்த்துக்களையும் சங்க இலக்கியம் என்று கொண்டே கருத்துத் தெரிவிப்போரும் இருக்கிருர்கள்...

சிறிது காலத்திற்கு முன்வரை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்க் கணக்கு என்னும் அனைத்துமே சங்க இலக்கியம் என்று கொள்ளப்பட்டன. இப்போதுதான், ஒரு வகையான ஆராய்ச்சியின் பின், எட்டுத்தொகையிலும் பத்துப் பாட்டிலும் ஒரு பகுதியும், பதினென்கீழ்க்கணக்கில் பல நூல்களும் மிகப்பிற்பட்ட காலத்தவையாக இருக்கவேண்டும் என்ற கருத்து ஏற்பட்டுள்ளது. இதை இன்னும் தெளிவாக விரிவாக ஆராய்ந்து வகைப்படுத்தினுல்தான், 'உண்மையிலேயே மூத்த தமிழ் எது: அதன் பிற்கால வளர்ச்சி எது?' என்பன தெளிவாகும்.

இது போலவே, பக்திக் காலத்தின் பல்வேறு நூல்களும் சமுதாயத்தின் பல்வேறு நிலையினருக்காக உருவாகியிருக்க வேண்டும். அந்த நிலைகள் எவை? அவற்றுக்கு மூலமான வரலாறு யாது? என்பவற்றை அறிய வேண்டுமானுல், அந்த இலக்கியங்களை நுனித்து ஆராய வேண்டும்.

இத்தகைய ஆராய்ச்சி வளர்வதற்கு ஒரே வழி, தமிழ் இலக்கியத்தைக் காலவாரியாகவும் கருத்து வாரியாகவும் வெவ்வேறு துறைகளாகப் பிரிக்க வேண்டும். அவ்வத்துறைகளின் சிறப்பு இயல்புகளைக் கண்டறியத் தக்க தனிப்பயிற்சி வல்லவராக அறிஞர்களைஉருவாக்க வேண்டும். அதற்குத் துணையான வரலாறு, சமுதாய இயல் முதலியவற்றிலும் [illegible] அவர்களுக்குச் [illegible] சியளிக்க வேண்டும்.

இந்த ஆய்வாளர்கள்அணி இடைவற்றிப் போகாதபடி இந்த வகையிலேயே தமிழ் இலக்கியப் பயிற்சி நடைபெறவும் வகைசெய்யவேண்டும். தூர்ந்து கிடக்கும் நமது நெடுவரலாற்றுக் கிணறு ஊற்றுக்கள் பீறிட்டடித்து நமது எதிர்காலத்தை வளப்படுத்த இவை எல்லாம் [illegible] செயல்படுதல்வேண்டும்.

## இரத்தப் பிசாசு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லில் தன் அழகு மேனியைக் காட்ட வெட்கினுள்.

ஆராய்ச்சி ஆவல் கொண்ட என்னுள்ளம் அவள் அழகைக்காணத் துடித்தன. அதற்கெல்லாம் மறுத்துவிடுவாள். அப்படிப்பட்டவள் பட்டப் பகலில் பிறந்த கோலத்துடன் பாஸ்கருடன் அந்த அறையில் இருந்ததை ஒரு நாள் கண்டேன்.

இதெல்லாம் டாக்டரின் கற்பனையாயிருக்குமென்று நினைக்காதே கீதா. என் வாழ்க்கையில் வீசிய புயற்காற்றின் பற்பல வடிவங்கள். நீ நம்பமாட்டாய் ஆனுல் யாவும் உண்மை. இதோ பார் இந்த ஒலிப்பதிவுக் கருவியை' என்று கூறி அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருந்த ஒருபெட்டியைத் தூக்கி வந்து சில பகுதிகளைச் சுற்றி விட்டு ஒலிப்பதிவுக் கருவியின் சுவிட்சை முடுக்கி விட்டார்.

'மல்லிகா! குளிகைகள் எமக்கு டாக்டர் வெகுமதியாகக் கொடுத்த செல்வம். சாகும்பொழுதும் மனிதன் நல்லதையே செய்துவிட்டுச் சாகிருன். சரி, சிகப்பு எனக்காகச் செய்யப்பட்டது. மடையன் தான் இளமைமாருதிருந்து என்மல்லிகாவைக் கொத்தித் தின்ன நினைத்தான். மல்லிகா அப்படியே உன் செல்லக்கையால் என் வாயில் போட்டுவிடு'என்று கூறியது ஓர் ஆண்குரல், அது பாஸ்கருடைய குரல் என்பதைக் கீதா உணர்ந்து கொண்டாள்.

'பாஸ்கர் குளிகைகளைஉட்கொண்டுவிட்டோம் என்னை என்றும் கைவிடமாட்டீர்களே' என்று கெஞ்சும் பெண்குரல்.

'பைத்தியக்காரி நான்கை விடமாட்டேன். நீ டாக்டரை ஏமாற்றிய மாதிரி என்னையும் ஏமாற்றி விடமாட்டாயே. ஆனுல் அவன் பைத்தியக்கார டாக்டர். நான் இப்படிப்பயங்கரப்பரிசோதனை செய்யேன். ஒரு பெண்ணை நம்பி' என்று கூறி முடிக்கும் தருவாயில் 'ஹ... ஹ...ஹ...' என்ற பேய்ச் சிரிப்பு. அது டாக்டரின் சிரிப்பு என்பதைப் புரிந்து கொண்ட கீதா அவரைப் பார்த்தாள்.

'என் குரல்தான். நான் ஒரு ஒலிப்பதிவுக் கருவியில் என் குரலைப்பதிவு செய்து வைத்திருந்தேன் அல்லவா? அது மறுபடி தன் வேலையை ஆரம்பித்து விட்டது. அதுவும் இந்த ஒலிப்பதிவுக் கருவியில் பதிவாகிக்கொண்டிருந்தது' என்ருர். அதற்கிடையில் குரல் தொடர்ந்தது.

'மல்லிகா! ஏமாற்றி விட்டியேடி வஞ்சகி. நீ ஒரு கொலைகாரி. உன்பக்கத்தில் நிற்பவன் ஒரு கொலைகாரன் அவன் படப்போகும் கதியைப்பார்' என்று டாக்டரின் குரல் ஓயுமுன்...

'ஆ...ஆ...ஐயோ... ம...ல்லி...கா' என்று பாஸ்கரின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி முழக்கமிடும் இரண்டாவது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (அட்டன்) மொடேன் (பதுளை)

ஜெய்சங்கர், விஜயலட்சுமி மனேகர்
ஸ்ரீராம் ஷீலா விஜயலிதா புஷ்பமாலா
தேங்காய் சீனிவாசன் பக்கிரிசாமி நடித்த

# வல்லவன் ஒருவன்




6-வது கடைசி வாரம்! கெப்பிட்டல் (கொழும்பு) 2-வது வாரம் வெலிங்டன் (யாழ்நகர்)

## பெற்றால்தான் பிள்ளையா?

---

## வெகுவிரைவில் எண்டடெயின்மெண்ட்ஸ் வெள்ளித் திரைகளில்!



சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

மற்றும் பல திரைகளில்!!!

தாய்பாசம், நட்பின் பிணைப்பு, காதலின் நெருக்கம், தியாகம், மர்மம் யாவும் பின்னிப் பிணைந்த துப்பறியும் ஜேம்ஸ்பொண்ட் நவீனம்!

* ஜெய்சங்கர் * பாரதி * ஓ. ஏ. கே. தேவர்
* சோ * ராதிகா

மற்றும் பலர் நடித்த

டைரக்ஷன் வி. வி. ராமன்

# நான் யார் தெரியுமா?

---


## 2 - வது ஜனத்திரள் வாரம்!

செல்லமகால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) அசோகா (புத்தளம்) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)

காசினோ (மாத்தளை) ஸ்ரீ முருகன் (வவுனியா) வின்சர் (யாழ்நகர்)

* ரவிச்சந்திரன் * ஜெயலலிதா * நாகேஷ்
* அசோகன் * நம்பியார் * மனோரமா

# மகராசி



## 2 - வது ஜனத்திரள் மிகுந்த வாரம்!

கெபிட்டல் (கொழும்பு)

எம். ஜி. ஆர், பத்மினி, பானுமதி, கிருஷ்ணன், மதுரம் நடித்த

# மதுரை வீரன்

(புத்தம் புதிய கொப்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்டுக்காக ... கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் மே மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.